# <u>விசுவாசம்...... நித்திய ஜீவன்</u>

"...சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் <u>அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்</u>..."
(ரோமர் 2:7)

"...நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்;
ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, <u>நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு</u>,......."
(உபாகமம் 30:19)

*இந்த உலகத்தில் (ஆன்மீக) மரணத்தையும் சாபத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதை அறியாமலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம்......*

"...ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது;
நான் உங்களுக்குச் சொல்லுகிற <u>வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது</u>..."
(யோவான் 6:63)

*ஒன்றுக்கும் உதவாத மாம்சத்தின் காரியங்களிலே....*
*நம்மையும் மீறி நாம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறோம்....*

<u>"...விசுவாசமானது</u> நம்பப்படுகிறவைகளின் உறுதியும்
காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது..."
(எபிரெயர் 11:1)

*அனைவரும் ஏதோ ஒரு விசுவாசத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.*
*இந்த வாழ்க்கைக்கும் வாழ்க்கைக்குப்பிறகும் எந்த அளவிற்கு நம் விசுவாசம் நம்மை வழிநடத்தும் என்று சிந்தித்துப் பார்ப்பது மிகவும் குறைவு....*

"...<u>நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்</u>, நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்..."
(2 தீமோத்தேயு 1:12)

*அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று... உணர்ந்தவர்களாக நாம் வாழ நம் விசுவாசம் சரியாக இருக்க சிந்தித்து செயல்படுவோம்....*

"...சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் <u>அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்</u>..."
(ரோமர் 2:7)

....அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார் என்ற உறுதிமொழி, <u>சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற</u> ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாக மட்டுமே நமக்குக் கிடைக்கும். சிந்தியுங்கள், செயல்படுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.